1972 ஆகஸ்ட் 24]

Thanjavur Big Temple.

Buses to Ponvilainthakalathur

* 322 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government had received a letter on 17th July 1970 from the Civic Association, Ponvilainthakalathur, requesting for the introduction of a bus service through their village either to Chingleput or Pondicherry; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பல்லவா போக்குவரத்துக் கழகம், 129-சி என் வழித் தடத்தில், சென்னை-பொன்விளைந்தகளத்தூருக்கு செங்கல்பட்டு வழியாக புதிய பேருந்துப் பணியை 13—4—1972 முதல் தொடங்கியுள்ளது.

நாதசுரப் பயிற்சியாளர்கள்

* 323 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களில் உள்ள நாதசுரப் பள்ளிகளில் எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள் ?

(இ) அங்கு பயிலும் மாணவர்கட்கு உதவிப் பணம் வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) திருவையாறு நாதசுரப் பள்ளியில் 23 மாணவர்களும், வலிவலம் நாதசுரப் பள்ளியில் 17 மாணவர்களும் பயிற்சி பெறுகிறார்கள்.

(இ) இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களிலுள்ள நாதசுரப் பள்ளிகளிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா ? இந்தப் பள்ளிகளிலே பயிற்சி முடிந்ததும் அந்த மாணவர்களுக்கு நற்சான்றிதழ் கொடுக்கப்